புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# சங்கத் தமிழரின் அகவாழ்க்கை பண்பாடு

முனைவர் ச.குருஞானாம்பிகா (SG),
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர்
உயர்கல்வி நிறுவனம்,
கோயம்புத்தூர் - 43

## முன்னுரை

உள்ளத்து உணர்வுகளைக் காதலாக்கி களவு வாழ்வில் மகிழ்தலும், அக்களவு கற்பில் நிறைவறுதலும் அகவாழ்வாக அமைகிறது. களவு வாழ்வில் காதலித்துக் கொண்டிருக்கும் தலைவன் தலைவியை அவர்களைச் சூழ்ந்த சுற்றமும், நட்பும் இல்லற வாழ்வினை அமைத்துக் கற்பு வாழ்விற்குள். அழைத்துச் செல்கின்றனர். கற்பு வாழ்வில் தலைவனும், தலைவியும் தலைமை இடம் பெறுகின்றனர்.குடும்ப வாழ்வை, அன்போடும், உயர்பண்பு நலன்களோடும், சுற்றம் தழுவுதலோடும். விருந்து போற்றுதலோடும் எளியோருக்கு ஈதலோடும் செலுத்துகின்றனர். மக்கள் பின்பற்றிய நாகரிகமும், பண்பாடும் உலகிற்கே முன்னோடியாக அமைந்திருந்தது. சங்கத்தமிழர்களின் அகவாழ்க்கை பண்பாடு குறித்து அறிவது கட்டுரைப் பொருளாக அமைகிறது.

## அகப்பொருள் வாழ்க்கை:

கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுதியாக முதன்மை பெறுகின்ற ஒழுக்க வகைகளை ஏழுவகைகளாகத் தொல்காப்பியர் வகைப்படுத்துகிறார். அன்பின் ஐந்திணைகள் என்று கூறப்படுவன முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்பன. கைக்கிளை ஒருதலைக்காமம் எனப்படும். பெருந்திணை பொருந்தாத காமம் குறித்தது. அகனைந்திணைகள் பண்டைத் தமிழரின் காதல் வாழ்வை விளக்குவன. அவர்கள் அகவாழ்க்கையின் மேன்மையினை எடுத்தியம்புவன. அகத்திணை களவு, கற்பு என இருபாற்படும். காதலின் தொடக்கம் களவு, களவிலே தொடங்கிய காதல் வாழ்வு திருமணத்தின் பின் கற்பு நெறி நிற்கும், இல்லறமாக மலர்கிறது. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் அக்கால வாழ்க்கையில் மக்களால் பெரிதும் போற்றப்பட்டிருந்தன. அறன் எனப்பட்ட இல்வாழ்க்கை களவு, கற்பு இவற்றின் அடிப்படையில் அமைவதைச் சங்க இலக்கியம் தெளிவுபடுத்துகிறது.

## உயர்பண்புகள்:

அறத்தை அடிப்படையாகக் கொண்ட உயர்பண்புகள் அகவாழ்க்கை உயர்வடையக் காரணமாக இருக்கின்றன. இதனை, சங்க இலக்கிய அகப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

"திருநுதற் குறுமக னணிநலம் வவ்வி அறினி லாள னறியே னென்ற திறனில் வெந்தள் அறிகரி கடாஅய் முறியார் பெருங்கினை செறியப் பற்றி நிறுதலைப் பெய்த வொன்றை
வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே" (அகம்.256:16-21)

நெறியற்ற வழியில் சென்ற ஒருவன், இளம்பெண்ணின் பெண் கலந்து, அறவோர் முன்னிலையில், அறமற்ற பொய்ச்சூள் உரை உண்மையறிந்த அவையத்தார் மூன்று கவர்த்த கிளைகளின் நடுவோ வைத்து, நீற்றினைத் தலையிலே பெய்கிற தண்டனை அளிக்கின்ற ஒழுக்கத்தில் இருந்து மாறுபடுவோரை சமூகமே தண்டித்துத் திருத்தி புலப்படுகிறது.

*"அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆ பண்புகளை அக்காலச் சமூகம் பெரிதும் போற்றியிருக்கி இப்பண்புகளைப் பெற்ற சான்றோர்களான ஒவ்வொருவரும் உயற் வேண்டும்" (குறுந்:102-4) என்பது அக்காலச் சமூகத்தின் மனநிலை இருந்தது. சிறப்புடைய ஒழுக்கமே அறம் என இலக்கியங்கள் இயம்புகின்றன.*

*"அஞ்சுவ தஞ்சா அறினில்" (கலி:42:26)*
*"அறனுமாரது" (ஐங்.44:4)*

*முதலிய இலக்கியச் சான்றுகள் ஒழுக்கத்தின் உயர்வினைத் தெளிவுப்படுத்துகின்றன. இவற்றின்வழி இலக்கியங்களில் ஒன்றாக ஒழுக்கம் பற்றிய வலிறுத்துதலை அறிய இயல்கிறது.*

*அருளறம்:*

*அருளறம் வீட்டில் பிறக்கிறது என்பது பழமொழி. அருளும் அறநெறிகளுள் ஒன்றாக இல்லறத்தில் பின்பற்றப் பெற்றிருத்தலை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அழியுஞ் செல்வமாகிய பொருட்செல்வத்தைப் பண்டைத் தமிழர் செல்வமாகக் கருதவில்லை. பொருள் அழியும் இயல்பினது ஆனதால், 'பொருட்பணி' குறுந்.344:7) என்றும், 'நில்லாப் பொருட்பணி" (நற்.241:120) என்றும் பொருள் குறித்தனர். இங்கு அருளே துன்பத்தைத் துடைப்பதற்குரிய அறமாக வலியுறுத்தப் பெற்றுள்ளது. பிறவுயிர்களின் துன்பத்தையும் தம்முடையது போலக் கருதிக் காத்தலே அறிவுடையவரின் செயலாகும். அதுவே சான்றோரின் கடமையாக இருக்கிறது, இதனை,*

*" பிறர்நோயும் தம்நோய் போல்போற்றி, அறன் அறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன்"*
*(கலி:139:2-3)*

*என்று கலித்தொகை, பண்டைத் தமிழரின் அருளறத்தை விளக்குகின்றது. இறைவனிடமும் அழியும் இயல்பினவாகிய பொன்னும், பொருளும். போகமும் வேண்டாது. அருளும், அன்பும், அறமுமாகிய நிலையான வற்றையே பண்டைத் தமிழர் வேண்டினர்.*

*"அன்னோர் அல்லது இன்னோர் சேர்வார் ஆதலின், யாஆம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால் அருளும், அன்பும், அறனும், மூன்றும்" (பரி.5:78-80) என்று பரிபாடல் குறிப்பிடுகின்றது.*

*" அருளுறச் செயின்நுமக்கறனுமா ரதுவே" (கலி.140:37)*
*என்று கலித் தொகை அருளறத்தை வலியுறுத்துகின்றது.*

*உயிர்களை நேசித்தல்:*

*எல்லா உயிர்களிடமே இரக்கங்காட்டுவது பண்டைத் தமிழ்களின் பரம்பரைக் குணம். காரணமில்லாமல் எவ்வுயிர்க்கும் இன்னலிழைக்க மாட்டார்கள், சிற்றுயிர்களுக்குக்கூடச் சிறுமை புரியமாட்டார்கள். இந்த உண்மையை ஒரு நிகழ்ச்சியின் மூலம் விளக்கிக் காட்டுகிறது, நற்றிணைப் பாடல். "ஒருதலைவன் தேரின்மேல் ஏறிக்கொண்டு வருகின்றான். அத்தேர் கடற்கரையின் வழியே வந்துகொண்டிருக்கின்றது. கடற்கரையிலே நண்டுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. தேரோட்டிவரும் பாகன், தேர்ச் சக்கரத்திலே அந்த நண்டுகள் அகப்பட்டு நசுங்காதபடி கவனத்துடன் தேரை ஓட்டிக்கொண்டு வருகின்றான். இச்சமயத்திலே அவனுடைய செய்கைக்கு உதவியாக நிலவும் தோன்றியது. அலைகள் மோதுகின்ற - ஒளிபொருந்திய மணல் நிறைந்த-கடற்கரை, அந்தக் கரையிலே சக்கரங்களின் அடியிலே நண்டுகள் அகப்பட்டுக் கொள்ளாதபடி பாதுகாத்துக் கொண்டே, தேர்ப்பாகன்குதிரைகளின் வாரைப் பிடித்து இழுத்துக் கவனத்துடன் தேரை ஓட்டினான் இச்சமயத்தில் அக்கடற்கரையில் நிலவும் புறப்பட்டது.*

*'புணரி பொருத பூமணல் அடைகரை ஆழி மருங்கின் அலவன் ஓம்பி வலவன் வள்பு ஆய்ந்து ஊர நிலவு விரிந்தன்றால் கானலானே" (நற்.11) என்றபாடல் அடிகளின் வழி பிற உயிர்களின் மேல் இரக்கம் கொள்ளுதலின் உயர்வு கூறப்படுகின்றது.*

*ஒழுக்கநெறி:*

*ஒழுக்கமுடைய வாழ்வே உயர்ந்தவாழ்வு என்பது பண்டையதமிழரின் கொள்கை, மணி, பொன், முத்து இவற்றாலாய் அணிகலன்கள் பழுதடைந்தால் சரிசெய்து கொள்ளலாம். ஆனால் சால்பு, வியப்பு, பெருமை ஆகி பண்புகள் குன்றினால், அவற்றை நேர் செய்து புகழில்நிலை*

*நிறுத்துதல் அறிவுடைய சான்றோர்க்கும் எளிதன்று" (குறிஞ். 13:18) எனகுறிஞ்சிப்பாட்டு இயம்புகின்றது.*

*நன்னெறியைப் போற்றி நல்வாழ்க்கை வாழ்ந்தவர் சங்கத்தமிழர். தனிமனித ஒழுக்கம் சமூக ஒழுக்கத்திற்குக் காரணமாக அமைவதால் ஒழுக்கமே உயர்பண்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.*

*அறம் உணர்த்தும் வாயில்கள்.*

*அகத்திணைப்பாடல்களில் அறச் சிந்தனைகளை ஒவ்வொரு நிகழ்விலும் கூறுபவர்களாக அகத்திணை மாந்தர்கள் விளங்கினர். நேரடியாக அறம் உணர்த்தியோர்களுள் தோழி, அறிவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். அவர்கள் வாழ்வியல் வழிமுறைகளை எடுத்துக்கூறித் தலைவன், தலைவியின் இல்லற வாழ்வைச் செம்மையாக்குதற்கு விழைந்ததைச் சங்க இலக்கியம், விளக்கிக் காட்டுகின்றது.*

*அறிவர்:*

*நல்லவை உரைத்தலும், அல்லவை கடிதலும் அறிவர் பண்புகளாகும். உடன்போக்கினை மேற்கொண்ட செவிலியை ஆற்றுவிக்கும் முக்கோல் பகவரின் அறிவுரைகள் போற்றத்தக்கன. பெண்மகள் பெற்றோரைவிட்டுப் பிரிதற்கு உரியவள். மலையில் பிறக்கும் சந்தனம், யாழில் பிறக்கும் இசை, கடலுள் தோன்றும் முத்து இவை முறையே பூசுபவர்க்கும், கேட்பவர்க்கும், அணிபவர்க்கும் பயன்படுவன. தாம் பிறக்கும் இடங்களுக்குப் பயன்படுவன அல்ல. அவைகளைப்போன்றே பெண் மகளும் பெற்றோருக்குப் பயன்படாள். தன்னை மணக்கும் தலைவனுக்கே பயன்படுபவள், என்னும் கருத்தினை கீழ்க்கண்ட கலித்தொகைப்பாடல் இயம்புகிறது.*

*'காணேம் அல்லேம், கண்டனம். கடத்திடை: ஆண் எழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய மாண் இழை மடவரல் காயிர்நீர் போறிர் பலஉறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை. மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம் என் செய்யும்? நினையூகால், நும்மக்கள் நுமக்கும் ஆங்கு ஆனையளே" (கலி.9:9-11)*

*சமுதாய அமைப்பில் பெண்களின் வாழ்வு ஆண்களைச் சார்ந்திருப்பதாக அமைகிறது. பருவ வயதை அடைந்தபின் அவளுக்குரிய தலைவனைச் சேரும்போதுதான் குடும்ப அமைப்பு உருவாகிறது. இதன் வாயிலாக சமூகத்திற்கு வேண்டிய அறப்பணிகளைச் செய்வதற்குக் காரணமாக கணவனும் மனைவியும் இணைந்த இல்லற வாழ்க்கை அவசியம். இதனை எடுத்துக்கூறி, அகவாழ்க்கையை நெறிப்படுத்தும் சான்றோர்களாக அறிவர் திகழ்கின்றனர்.*

*தோழி:*

*தலைவன், தலைவியின் நல்வாழ்வினை எண்ணுகின்ற தோழி, உலகியல் அறிவும் சொல்லாற்றலும் மிக்கவள். தலைவனுக்கு அவ்வப்போது நன்னெறிகளை எடுத்துக் கூறி நன்னெறிப்படுத்துபவளாக தோழியே விளங்குகிறாள்.*

*வரைவு கடாதல் துறையில் தோழிகூற்றாக அமைந்துள்ள பாடல்,*

*"ஆற்றுதல் என்பதொன் றலந்தவர்க் குதவுதல் போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல் அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல் செறிவெனப் படுவது கூறியதுமறா அமை நிறைவெனப் படுவது மறைபிற றறியாமை முறையெனப் படுவது கண்ணோடா துயிர் வௌவல் பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்"*

*(கலி.133:6-14)*

*வாழ்வின் எல்லா நிலையிலும் வரும் உறவு என்பது நட்பு மட்டுமே. ஒவ்வொரு உறவும் ஒவ்வொரு நிலையிலும் பிரிந்து செல்ல வாய்ப்பு உள்ளது. அதுவே இயற்கை. ஆனால் நட்பு என்பது எந்த வயதிலும் பெறும் உயர்வான உறவாகும். தோழியின் நட்பு அத்தகையவாறே அமைந்துள்ளது. தலைவியின் களவுக் காலத்திலும், கற்புக் காலத்திலும் உடன் நிற்பவளாகவே எப்போதும் நிற்கிறாள்.*

*" முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரீகர்*

*(நற்.355)*

*என்பதால் புலனாகும். தலைவன் பிரிகிறநேரத்தில் சூழலை இயம்பாகவும், மனம் ஏற்றுக் கொள்ளும் வகையிலும் தலைவியிடம் உடன்பாட்டு நோக்கில் எடுத்துரைப்பவள் தோழி.*

*அறம் உரைத்தல்:*

*தலைவனும் தலைவியும் இணைந்து வாழும் அன்பு வாழ்க்கை. அறத்தை இடையிடையே நினைவூட்டி ஆற்றுப்படுத்துகின்றவளாகத் தோழி அமைகின்றாள் என்ற கருத்து தோழியின் அன்பினைக் கூறி, உடன்பாடான அறத்தைக்கூறும் பாங்கைத் தெளிவுபடுத்தும். தலைவன் களவுக்காலத்தில் பிரிந்து சென்றபோது, அவள் அன்பைப் புகழ்ந்து கூறித் தலைவியை ஆற்றுவித்தல் வழக்கம்,*

*அறிவுரைத்தல்:*

*களவுவாழ்வில் தலைவிக்கும் சார்பாக இருக்கிற தோழி தலைவனுக்கு அறிவுரை சொல்வதிலும் அறத்தையே வலியுறுத்தி அதை தலைவன் மனம் உணரும் வகையில் உரைக்கிறாள். அறனும் பொருளும் வழாது நாடித் தம் தகுதிக்கு ஏற்ப முன்னியது முடித்தல் நன்மக்களது நல்லொழுக்கமாகும். ஆகவே பெரியோரின் ஒழுக்கம் அதற்கு மாற்று நடந்தால் இவ்வுலகில் அறம் நிலைபெறாது. இதனை,*

*'அறனும் பெருளும் வழாமை நாடி. தற்தகவு உடைமை நோக்கி, மற்று அதன்*
*பின்ஆ கும்மே, முன்னியதுமுடித்தல்*
*அனையே பெரியோர் ஒழுக்கம்" (அகம்.286:10-13)*

*என்று அகநானூறு சான்றுகூறுகிறது. வாழ்க்கைக்கு முதன்மையான அறநெறியினைத் தோழி தலைவனுக்கு வலியுறுத்தி நல்லொழுக்க நெறியில் செல்ல வேண்டுவதை எடுத்துக் கூறுவாள். காதல் என்ற உணர்வு மனத்தளவில் உயர்ந்து நிற்கிறது.*

*தலைவியின் உடலழகு குன்றி நரைமூதாட்டியாக ஆனபோது தலைநாள் போல அவள் பால் அன்புடன் அவளைப் போற்றிக் காகி வேண்டிய அறநெறியினைத் தோழி அறிவுறத்துகிறாள் என்ற கருத்தினை கீழ்க்கண்ட பாடல் அடிகள் விளக்குகின்றன.*

*"அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும் பொன்நேர் மேனி மணியின் தாழ்ந்த நல்நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும் நீத்தல் ஓம்புமதி - பூக்கேழ்ஊர" (நற்.10:1-4) என்ற பாடல் அடிகள் காதலின் உண்மை மன அழகில் நிறைவு பெறுவதைக் காட்டுகின்றன.*

*ஆற்றுவித்தல்*

*தலைவன் தலைவியின் வாழ்க்கைக்கு உறுதுணையாகிய தோழி துன்பத்தினை நீக்கி நல்வழிகாணும் சிறந்த நட்பினள் : ஒழுக்கத்தில் ஏற்படும் இழுக்கம் நீக்கி நிலைநிற்க உதவும் ஊன்றுகோலாக, அறிவுரை கூறி அறநெறிப்படுத்தும் வழிகாட்டியாகத் திகழ்பவள். தலைவியை ஆற்றுவிக்கும் இடத்து,*

*''உவக்காண் தோன்றும் குறும்பொறைநாடன்" (அகம் 4:13)*
*"படரும் பையப் பெயரும்"*
*என்றும்,*
*என தலைவியின் துன்பம் நீங்குமாறு ஆறுதல் கூறுமிடத்தும், (குறுந். 5:1)*
*"நீர் இல் வைப்பின் சுரன் இறந்தோரே'' (குறுந். 5:1) என்று அருளாது பிரிந்தோற்பால், அஞ்சுதல், அறனற்றது எனத் தோழி தலைவியிடம் அறிவுறுத்துவதாக அமைகிறது.*

*களவு நெறி:*

*ஒத்த வயதும், குணமும் உடைய தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் காதல் கொள்ளுதல் களவொழுக்கமாகிறது. இன்பமும், பொருளும் அறமும் சிறந்திட அன்பும் சேர்ந்து களவு தொடங்குகிறது. அதுவும் உடன்பாடானதாகவே அக்கால மக்களால் ஏற்கப் பெற்றிருந்தது என்பதை,*

*"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் காமக்கூட்டம்" (தொ.பொ.89)*

என்று தொல்காப்பியம் கூறுகிறது.

வரைவுகடாதல்

தலைவனும், தலைவியும் சந்தித்து மகிழும் களவு வாழ்க்கையிலிருந்து தலைவனைக் கற்பு வாழ்க்கையில் ஈடுபடத் தூண்டுதல் இத்துறையின் நோக்கமாகும். தலைவன் வரைவு முயற்சியின்றிக் காலம் நீட்டிக்கும்போது, தோழி வரைவு இன்றியமையாமையை அவனுக்குணர்த்தி, வரைவின்பால் ஈடுபடுத்துவாள். இத்துறையில் உடன்பாட்டுச் சிந்தனைகளே பெரும் பான்மையும் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. வரைவு கடாதல் துறையில் தோழி தலைவனுக்கு அறிவுறுத்துமுகமாக உலகுக்கு அறிவுரைகளை, புலவர்கள் வழங்கியுள்ளனர்.

'வேரல்வேலி வேர்க்கோட் பலவின் சாரல் நாட செவ்வியை ஆகுமதி யாரஃ தறந்திசி னோரே சாரல் சிறுகோட்டுப் பெரும் பழம் தூங்கி யாங்கிவள் உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே' (குறுந்.18)

என தலைவியை வரைதல் பொருட்டு தலைவனுக்குத் தோழி அறிவுறுத்துகிறாள் எனத் தலைவியை வரைதற்பொருட்டுத் தலைவனுக்குத் தோழி அறிவ துகிறாள், தலைவன் நாட்டு மலையில் வளர்ந்துள்ள பலாவின் சிறிய கொம் பெரிய பழம் தன்னைத் தாங்கும் எவ்வகை பற்றுக் கோடும் இன்றித் தாலே பழுத்துத் தொங்குவது போல, தலைவியின் உயிராகிய கொம்பு சிறிதாய் இருப்பதாக, அதன் கணி விளங்கும் காமநோய் பெரிதாக வருத்துவதாக தம்போடு எடுத்துக்கூறுகிறாள் தலை மற்றும் தலைவனினி உள்ளம் ஏற்கும தோபூர் அவனுக்கு உணர்த்தும் கருத்து இதன் வாயிலாக அறியப்படுகிறது.

அறத்தொடு நிற்றல்:

தலைவனும், தலைவியும் பிறறியாது களவு வாழ்வு நடத்திப் பின் கற்புவாழ்க்கையாக மாற்றுதற்கு நெறிப்படுத்தும் துறை அறத்தொடு நிற்றலாகும். அறத்தொடு நிற்றல் என்பது தமிழர்தம் வாழ்வில் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட நிகழ்வு. தலைவிக்குத் தலைவனுடன் களவில் இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த பின்னர், திருமணம் அவனுடன்தான் நிகழவேண்டும். தலைவியின் களவு வாழ்வை அறியாமல் மணம் பேச வருதலும் கூடும், அப்பொழுது தலைவி, தோழியிடத்தே அறத்தொடு நின்று. நிகழ்ந்தது கூறி, உதவ வேண்டுவான். தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தன் ஐயர்க்கும் அறத்தொடு நிற்பர். உள்ளப் புணர்ச்சிக்கு எத்தகைய மதிப்பு அளிக்கனர் என்பது புலனாகும். களவு வாழ்வு பொய்ப்பட்டு வேற்றவன் வரைவு நேருமாயின், காதல் அறம் பிழைக்குமாதலின் அதனைக் தவிர்க்கும் வகையில் களவினைத் தோழி, செவிலி, நற்றாய் முதலியோருக்குப் புலப்படுத்துதல் தலைவி முதலியோருக்குக் கடனாகும். அதனால் அச்செயல் அறத்தொடு நிற்றல் எனப்பட்டது.
"இத்துறை களவைக் கற்பாக மாற்றுதற்கான முயற்சியாக அமைகிறது. களவு, கற்பு என்னும் இருகரைகளுக்கிடையே ஒருபாலம் போல இந்துறை விளங்குகிறது. இது அகத்திணைத் துறைகள் அனைத்திலும் சிறப்பு வாய்ந்தது". இற்செறிப்பு, வேலன் வெறியாட்டு, நொதுமலர் வரைவு, இரவுக் குறியில் தலைவருக்கு ஏற்படும் ஏதம் காரணமாகத் தலைவி ஆற்றாமை மீதூர வருந்துவாள். அவளது உள, உடல்நிலை மாற்றங்களைக் கண்ட நிலையில் தோழி களவினைத் தமர்க்கு வெளிப்படுத்தித் தலைவியைத் தலைவனுக்கே திருமணம் செய்து கொடுக்கச் செய்தல் நல்லது என்று களவொழுக்கத்தினை வெளிப்படுத்துவாள். தலைவியே தன்னிலையைத் தோழிக்கு முதலில் வெளிப்படுத்தும் முறைமையும் உண்டு. இங்ஙனம் வெளிப்படுக்கலையே அறத்தொடு நிற்றல் என்று ஆன்றோர் வழங்குவர். "அறந்தொடு நிலையாவது" தான் கொண்ட ஒழுக்கத்தின் கண் நிற்றல் அறம் ஒழுக்கம் அதாவது களவொழுக்கம் முதிர்ந்து கற்பொழுக்கம் ஒழுகுதல்" என்கிறார் புலவர் குழந்தை.

கபிலரின் குறிஞ்சிப்பாட்டு, இத்துறையில் அமைந்த சிறப்புடையது. இப்பாடல் தமிழரின் அறத்தொடுபட்ட அகவாழ்வின் சிறப்பினை அறிவிப்பது. தோழி செவிலிக்கு அறத்தொடு நின்ற வகையினை நாடகப்பாங்கில் எடுத்தியம்புவது. அறத்தொடு நிற்கும் தோழி தலைவியின் நான் முதலிய பண்புகளுக்கு ஊறு ஏற்படாவண்ணம் அறத்தொடு நிற்பாள். தலைவியின் கற்புநிலையும், தலைவனின் அறிவும், பெருமையும், கவினும் டொது காக்கும் பண்பும், இந்நூலுள் பெரிதும் போற்றப்படுகின்றன.

*களவு வாழ்க்கையில் தோழியின் துணையோடு அமையும் கூட்டத்தில் வருகின்ற அறத்தொடு நிற்றல் என்னும் துறை, துறைக்குறியீடு, அறம் நோக்கியே களவு நடைபோட வேண்டியதை உணர்த்துகின்றது. அந்த அறம் தலைமகனின் உறவுகளோடு சேரும்போது, கொடுப்போர் கூடிய மணமாகிறது. அல்லாதபோது உடன்போக்காகிக் கொடுப்போரின்றி அமையும் மணமாகிறது. இருவகை மணங்களும் இல்லறம் என்னும் நல்லறப்பணிக்கு நுழைவாயில் ஆகின்றன" என்ற கருத்து ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது" இதற்கு அரண் சேர்ப்பதாக ஐங்குநூற்றுப்பாடல் காணப்படுகிறது.*

*'அன்னாய் வாழிவேண் டன்னையென் தோழி நனிநாண் உடையள் நின்னும் அஞ்சும் ஒலிவெள் ளருவி ஓங்குமலை நாடன் மலர்ந்த மார்பின் பாயல்*
*துஞ்சிய வெய்யள் நோகோ யானே" (ஐங்.205)*
*என்ற பாடல் தலைவி தலைவன் மீதுகொண்ட காதலை செவிலிக்குத் தோழி எடுத்துக்கூறும் விதமாக அமைந்துள்ளது. தலைவனின் உயர்ந்த பண்பும், செல்வமும், புகழும் கூறி தலைவிக்கு ஏற்றவன் என்பதை செவிலி உடன்பாட்டோடு ஏற்றுக்கொள்ளும் வண்ணம் எடுத்துரைக்கிறாள்.*

*உடன் போக்கு:*

*அகப்பாடல்கள் முழுவதும் நம்பிக்கையோடு தலைவன் தன்னை மணமுடிக்கின்ற நிகழ்வை எண்ணுகின்ற தலைவியை படைத்துள்ளன. களவு வாழ்வினின்றும், கற்பு வாழ்விற்குத் தலைவியோடு உறுதியாக அழைத்துச் செல்லுகின்ற உடன்பாட்டு எண்ணம் நம்பிக்கையாகவே இருக்கிறது.*

*"வெற்றிகரமான எல்லா மனிதர்களுக்கும் பொதுவாக அடிப்படையான, அத்தியாவசியமான குணம் தன்னால் வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கையே'*
*என்று காப்மேயர் கூறுகிறார். தலைவனோடு வாழுகின்ற இல்வாழ்வு குறித்த தலைவியினது உள்ளம் எப்போதும் நன்மையைக் குறித்தே நம்பிக்கையோடு சிந்திக்கிறது. களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவி தன்னை விரும்பும் காதலர் விரைவாக வந்து தன்னை மணத்துகொள்ள வேண்டுமென்பதில் ஆர்வம் மிக்கவளாக விளங்குகிறாள். தலைவி தன் காதலன் மாட்டுத்தான் கொண்டிருக்கும் அளவு கடந்த காதலின் காரணமாக அவனைக் தனிகோடு குறை கூறிப பேசினும், காதலன் நம்பிக்கையில் காட்டிக் கொடுக்க மனமில்லாமல் அவன் சார்பாகவே பேசி, காதலைப் பாராட்டிப் பேசுதல், உள்ளமேம்பாட்டில் தோன்றும் உயர் சிந்தனைவ வெளிப்படுத்துகிறது. களவு வாழ்வின் இறுதியில், கற்பொழுக்க நெறிக்கார தலைவன் தலைவி உடன்போக்கு நிகழ்கலுண்டு இதனைத் தொல்காப்பியர், "கொடுப்போர் இன்றியும் கரண முண்டே புணர்ந்துடன் போகிய காலையான (தொ.பொ.141) என்பார். உடன் போக்கினை. "அறந்தலைபிரியா ஆறு" (கலி.9:24) என்று கலித்தொகை கூறுவதோடு,*
*" பாமையும் அம்பலும் மாப்புணர்ச்சியும்எல்லாம்உடன் நீங்க சேயுயர் வெற்பனும் வந்தனன்" (கலி. 39:43) எனத் தலைவியின் பசலை நோய்நீங்கிடுமாறு உடன் கூட்டி செல்ல தலைவன் வந்த செய்தி கூறப்படுகிறது.*

*இல்லறத்தின் மாண்புகள்:*

*கணவன் தேடித்தரும் செல்வத்தைக் கொண்டேமனைவி இல்ல நடத்தினாள். தன் கணவன் உயிரோடு இருக்கும்பொழுது தந்தை வீட் உதவியைப் பெறுவது முறையற்றதாகக் கருதினாள், இதனை நற்றிணைப்பாடல் எடுத்தியம்புகிறது. 'அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள் கொல்? கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக் கொடுத்த தந்தை கொழும்சோறு உள்ளாள். ஒழுகுநீர் நுணங்கு அறல் போலப் பொழுதுமறுத்து உண்ணும் சிறுமது கையளே" (நற். 110:9) விளையாட்டுப் பெண்ணாக இருந்த அவள் இப்பொழுது மனையாளுக்கு அறிவையும், ஒழுக்கத்தையும் திருமணமான காலத்தின் பிறகு அறிந்தவளாகிறாள். அவளைக் கொண்ட கணவனது குடும்பம் வறுமையடைந்து. அதையறிந்த அவள் தந்தை உணவுப்பொருட்களை அனுப்புகிற அப்பொருள்கொண்டு வளமாக உண்ணும் சோறு பற்றி அவள் நினைக்க இல்லை. நீரின் வழியில் தானும் ஓடும் கருமணலைப்போல கணவன் வழியிலே அவள் நடக்கிறாள். ஒருவேளை மட்டும் உண்ணுகிறாள். இதன் வழி ஏழ்மை நிலையிலும் கூட இன்றைய காலத்தைப் போல கல்வியோ, வெளியே சென்று வேலை பார்க்கின்ற அனுபவமோ இல்லாத சாதாரண இல்லத்தரசி கூட மன உறுதியோடு எதனையும் எதிர்கொள்ளுவதை அறிய முடிகிறது.*

மனைமாட்சி, வினைமாட்சி:

தலைவன் புறத்தொழுக்கம் மேற்கொண்ட காலையும், இல்லறக் தடமையை நினைந்தொழுகும் இயல்பினள் தலைவி. மனையறம் காக்கும் மாண்புடன் வீடும், நாடும் நலம் பெறுதலைத் தலைவி விழைகின்றான். நாடு காவற்பொருட்டு மன்னனை வாழ்த்தி, நாட்டில் பசி, பிணி நீக்கிக் களவில்லாது அரசுமுறை செய்தலை வேண்டுகின்றாள்.

உண்டி முதற்றே உலகு,. ஆதலின், உலக உயிர்கள் இன்புற்று வாழ்வதற்கும், அறமுதலாகிய உறுதிப்பொருட்கள் திறத்திற்கும் இல்லறக் கடமையாற்றுவதற்கும் உணவுப்பொருட்கள் மிகுதலை வேண்டும் தலைவி

"மாரிவாய்க்க வளநனி சிறக்க " (ஐங். 10:2)

" நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க(ஐங். 1:2)

'பால்பல பெறுக பகடுபல சிறக்க'' (ஐங்.3:2)

" விளைக வயலே" (ஐங்.2:2)

என்றும் வேண்டுகிறாள். இவ்வாறு மனையறம் போற்றலை மகளிரும், வினையறம் புரிதலை ஆடவரும் மேற்கொண்டதால் இல்லறம் சிறந்து விளங்கியதைச் சங்க இலக்கியம் புலப்படுத்துகின்றது. மனையறத்திற்கு உரிமையுடையவளாக மனைவி விளங்கினாள். காப்பதைக் கடமையாக மகளிரும், வினையறம் மேற்கொண்டு, புறவாழ்க்கை நாகரிகத்தைப் பேணிக் காப்பகை ஆடவரும் தத்தம் கடமையாக. மேற்கொண்டனர். இல்லறம் சிறப்புறக் கணவன், மனைவியர். கருத்தொருமித்து வாழ்தல் வேண்டும் என்பதை உணர்ந்து வாழ்ந்தனர்.

முடிவுரை:

உணர்வுகளின் அடிப்படையில் உருவாகின்ற அகப்பொருள் பண்பாடானது சங்க காலத்தில் களவு கற்பு என்று இரு பிரிவுகளில் அடங்கியது. களவு வாழ்வு, கற்பு வாழ்விலே நிறைவுற்றது. அறத்துடன் நிற்றல், வரைவுகடாதல், உடன் போக்கு போன்றதுறைகளில் சுற்றம் மற்றும் நட்புச் சார்ந்தோர் நம்பிக்கையோடு ஊக்கப்படுத்துகின்ற வாழ்க்கை காணப்படுகிறது. இல்லற வாழ்வின் சிறப்பாக விருந்து போற்றுதலும் பகுத்து உண்கிற பண்பும் தன்னலம் இல்லாத நேயமும் அமைந்திருத்தலையும், உன்னதமான உயர்பண்பாடு நிறைந்த வாழ்க்கையையும் சங்க அக பாடல்களில் காண முடிகிறது.

துணைநூற் பட்டியல்

1. அகத்தியலிங்கம் - சங்கத்தமிழ் (மொழியியல் நோக்கில் சங்க இலக்கியங்கள்), அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர், மு.ப : 1983

2. 2. ஆசிரியர் குழு - திருக்குறள், கற்பக விநாயகர் பதிப்பகம் சிவகாசி

3. இளம்பூரணர் (உ.ஆ) - தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018

4. இராமசுப்பிரமணியம். வ.த - புறநானூறு மூலமும், தெளிவுரையும்; திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயண சாலை, டி, நகர், சென்னை – 600 017

5. சோமசுந்தரம். திரு. பொ. வே - குறுந்தொகை மூலமும் உரையும் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பகக் கழகம் திருநெல்வேலி

5. துரைசாமிப்பிள்ளை. சு. ஔவை - நற்றிணை மூலமும் விளக்கவுரையும், பூம்புகார் பதிப்பகம், 127, பிரகாசம் சாலை, சென்னை – 600 108.

6. சாமி சிதம்பரனர் - எட்டுத்தொகையும் தமிழர்பண்பாடும், அறிவு பதிப்பகம், 142, ஜானி ஜான்கான்ரோடு, ராயப்பேட்டை, சென்னை – 600 014.

********* ********* ********** ********* ********* ********** ********** **********